[9th August 1966

கனம் திரு. வெ. ராமையா: நான் இப்போது பதில் சொன்னது பூராவும் மிகத் தீவிரமான ஆராய்ச்சித் திட்டங்கள். கனம அங்கத்தினர் கேட்கிற கேள்வி தற்சமயம் ஃபில்ட்டர் பாயின்டஸ் பம்ப்செட் வைத்து கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருப்பது பற்றியது. அதைப்பொறுத்த வரையில் மின்சார போர்டோடு கலந்து தொடர்ந்து பரிசீலனை செய்து கனெக்ஷன் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

திரு. செ. மாதவன்: பூமிக்கு அடியில் உள்ள தண்ணீர் ஓட்டத்தைக் கணக்கெடுத்துக் கண்டுபிடிக்க நவீன சாதனங்கள் உபயோகப்படுத்தப்பட்டனவா? அவைகளின் பலன் கிடைத்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: அந்த அடிப்படையில்தான் இந்த இந்த ஆராய்ச்சிகள் நடக்கின்றன. யுனைட்டெட் நேஷன்ஸ் ஸ்பெஷல் ஃப்ண்டிலிருந்து கருவிகள், யந்திரங்கள் கிடைத்து ஆராய்ச்சிகளெல்லாம் நடந்திருக்கின்றன.

கிராம அதிகாரிகள் வேலை நீக்கம்

*270 **கேள்வி.—திரு. செ. மாதவன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு, பிபரவரி திங்களில் ஏராளமான கிராம அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்களா?

(இ) அதன் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Tharumathupatti-Panrimalai road

*271 *Q*.—SRI S. NANJUNDA ROW: Will the Hon. the Minister for Food be pleased to state whether the Government have proposed to include the formation of a new road to Panrimalai from Tharumathupatti in Dindigul taluk in the Fourth Plan?

THE HON. SRI V. RAMAIAH: The work of forming a road from Mallayapuram in the plains to Panrimalai and on to Pachalur has been proposed in the draft Fourth Five-Year Plan. The work will be taken up for execution, subject to availability of funds and its relative priority.

ஸ்ரீகாளத்திநாதர் கோயில் நிலம்

*272 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுகா பனப்பாகம் கிராமத்திலுள்ள ஸ்ரீகாளத்திநாதர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைப் பஞ்சாயத்து போர்டு பலவந்தமாக

எடுத்துக்கொண்டதை எதிர்த்து அக்கோயில் நிர்வாகியாரால் ராணிப்பேட்டை ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மனு ஏதேனும் 10-3-1965 அன்று கொடுக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The inam in question has vested in the Government free of all encumbrances with effect from 15th February 1965 according to Section 3 (b) of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. The Assistant Settlement Officer, Madras, has been requested to initiate action under the provisions of the Act.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இன்னும்கூட கோவில் நிலத்தை பஞ்சாயத்து போர்டு ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது. கோவில் நிர்வாகிகள் அரசாங்கத்திற்கு ஏதாவது தாக்கீது அனுப்பி வைத்தார்களா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் சொன்ன விவரத்தைவிட மேலே ஒன்றும் இல்லை.

தாம்பிரபரணி கால்வாய்

*273 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபரணி கால்வாய்களின் புனரமைப்பு வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டனவா ?

(இ) இல்லை எனில் காரணமென்ன, எப்பொழுது மேற்கொள்ளப்படும் ?

(உ) மேற்படி கால்வாய் வேலைகள் புனரமைப்பிற்காக பொதுப்பணித் துறை ஸ்பெஷல் டிவிஷன் ஒன்றும் நிறுவும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை. இவ்வேலைகள் சிறிய பாசன விசேஷ திட்ட நிர்வாக பொறியாளரால் செயலாக்கப்படுகின்றன.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இவ்வேலைகளுக்கெல்லாம் மொத்தத்தில் எவ்வளவு தொகை எஸ்டிமேட் செய்யப்பட்டிருக்கிறது ? வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 2-3 ஆண்டுகள் ஆகியும் பூர்த்தியாகாத காரணம் என்ன ? தண்டத் தீர்வைக்கும் கால்வாய் புனரமைப்புக்கும் சம்பந்தம் இருப்பதால் துரிதமாக வேலையை முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?